II.—ANNOUNCEMENTS BY THE DEPUTY SPEAKER—*cont.*

RE. (?) ARREST OF SRI M. KALYANASUNDARAM, M.L.A.

DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received the following telephonic message at 12-30 p.m. to-day from the Commissioner of Police :—

' Sri M. Kalyanasundaram, M.L.A., was arrested this day at 11-05 hours opposite to the main gate, Rajaji Hall, Mount Road, for defying the prohibitory order under Section 41 in force in the area.'

III.—VOTING ON DEMANDS FOR ADVANCE GRANTS FOR THE YEAR 1957-58—*cont.*

(5) DEMAND IV—FOREST DEPARTMENT—*cont.*

(6) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES—*cont*

(7) DEMAND XIX—VETERINARY—(*cont.*)

12-41 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : உதவி சபாநாயகர் அவர்களே இந்த மான்யம் மிகவும் முக்கியமான மான்யமாகும். விவசாயம், வனம், கால்நடை இவைகளைப்பற்றி இருக்கக்கூடியவைகள். நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக இருக்கக்கூடியவைகளாகும். அது பற்றி பல அங்கத்தினர்கள் பல விஷயங்களைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று நாம் திட்டமிட்டிருப்பது அதன் அடிப்படையின் கீழ்தான். நம் பொருளாதார பலத்தை அதிகரிக்கவேண்டுமென்று விரும்பினால், அது நாம் விவசாயத் துறையில் எவ்வளவு தூரம் வெற்றி பெறப் போகிறோமோ அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு தொழில் அபிவிருத்தி போன்ற மற்ற அபிவிருத்திகளெல்லாம் விவசாயத்தில் நாம் எவ்வளவு தூரம் கவனம் எடுத்துக்கொண்டிருக்கிறோம், அதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையினால் விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக் கொள்வது மிகவும் முக்கியம். அதற்காக பல நடவடிக்கைகளையும் இன்று சர்க்கார் எடுத்து வருகிறது.

முதலாவதாக, நல்ல விதைகளை தயாரித்து அவைகளையெல்லாம் விவசாயிகளுக்கு கொடுப்பது என்பது இன்றைக்கு ஏற்பாடு. அதைத் துரிதப் படுத்துவதற்காகத்தான் சர்க்கார் இந்தச் சட்டசபையில் நேற்று முந்தாநாள் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த அடிப்படையில் நல்ல விதைப் பண்ணைகள் ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் நல்ல விதைகளை எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வதுதான் சர்க்காரின் முதல் திட்டமாக அமைந்திருக்கிறது. அந்தப் பண்ணைகள் அமைப்பதில், அது நல்ல முறையில் நடைபெறுவதற்கு இங்குள்ள அங்கத்தினர்களின் ஒத்துழைப்புமட்டுமல்ல, பொது மக்களின் ஒத்துழைப்பும் போதிய அளவில் இருந்தால்தான் இப்படிப்பட்ட லட்சியங்களை நாம் அடைய முடியும். அதோடு நாம் எவ்வளவு கணக்கிட்டிருக்கிறோமோ அந்த அளவிற்கு இந்த விதைப் பண்ணைகளையும் பெருக்க முடியும். ஆகவே, நல்ல நிலங்கள் கிடைப்பதோடு அதற்குப் பிற்பாடு அந்தப் பண்ணைகள் நல்ல முறையில் நடைபெருவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும், அதில் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக. எல்லோருக்கும் உரம் கொடுக்கும்படிச் செய்யவேண்டும். இதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்ற முறையில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தில் இதற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எரு என்று சொல்லும்போது நாம் எல்லோரும் ரசாயன